[2009 பிப்ரவரி 23

47—

திருப்பணி

***45893—திரு. எச். வசந்தகுமார்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, ஏர்வாடி, திருவழுதீஸ்வரர் பெரியநாயகி அம்பாள் திருக்கோயில் திருப்பணி நடைபெறவும், தேர் ஓட்டுவதற்கும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, ஏர்வாடி, அருள்மிகு திருவழுதீஸ்வரர், பெரியநாயகி அம்பாள் திருக்கோயில் திருப்பணி மற்றும் தேர்த் திருப்பணி நடைபெற உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இத்திருக்கோயிலின் திருப்பணிக்கான மொத்த மதிப்பீடு ரூபாய் 29.95 இலட்சத்தில், ரூபாய் 5 இலட்சம் அரசு மானியமாக நிதிப் பங்கீடு செய்யப்பட்டு, அந்த மானியத் தொகை வழங்கப்பட்டுவிட்டது. எஞ்சிய மதிப்பீட்டுத் தொகையினைப் பொது மக்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று, இதர பணிகள் தொடர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதைப்போல, தேர்த் திருப்பணிக்காக ரூபாய் 10.50 இலட்சம் மதிப்பீட்டில் அரசு நிதி உதவியாக ரூபாய் 10 இலட்சம் வழங்கப்பட்டுவிட்டது. எஞ்சிய தொகை ரூபாய் ஐம்பதாயிரத்தைப் பொது மக்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று, தேர்த் திருப்பணி மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு செய்த உதவிக்கு நன்றி. ஆனாலும் தேர் மிக

2009 பிப்ரவரி 23]

நீண்ட நாட்களாகப் பயன்படுத்தாத காரணத்தினாலும், அந்தத் திருக்கோயில் ஏறத்தாழ 600 ஆண்டுகளுக்கு முந்தையதாக இருப்பதாலும், மொத்த estimate பத்து இலட்சத்து ஐம்பதனாயிரம்; அதில் பத்து இலட்சம் ரூபாயை அரசு மானியமாக அளித்து இருக்கிறது. முன்பு, அதன் 4 சக்கரங்களுக்கும் 3¾ இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்று மதிப்பிட்டு அதைக் கணக்கிட்டிருக்கின்றார்கள். இப்போது திருச்சிராப்பள்ளி, 'பெல்' கம்பெனி, அதன் நான்கு சக்கரங்களுக்கும் 7 இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்று சொல்லியிருக்கிறது. மரத்தால் செய்த அந்த உருவங்கள் அனைத்தும் கெட்டுப்போய் விட்டதால், அதன் மதிப்பை 20 இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று அங்கேயிருக்கின்ற அதிகாரிகளும், பொதுமக்களும் கேட்கிறார்கள். அமைச்சர் அவர்கள் 10 இலட்சம் ரூபாய் என்பதை 20 இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தந்து, அந்தத் தேரை தமிழக முதல்வர் ஆட்சியில் மீண்டும் ஓட விட வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தத் தேருக்காக மூன்று அழைப்புகள் ஒப்பந்ததாரர்களிடமிருந்து கோரப்பட்டு, யாரும் முறையாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்து எடுக்க முன்வராத நிலையில், திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, திருத்திய மதிப்பீடு வரப்பெற்றவுடன், மேற்படி திருத்திய மதிப்பீட்டிற்கு ஏற்றவாறு அங்கீகாரம் அளித்து, நிதி உதவி உயர்த்தித் தர, நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. தொடர்ந்து இதுபோல் எங்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன். வணக்கம்.

[2009 பிப்ரவரி 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் சட்டமன்றத் தொகுதியிலே ஏரிக்குப்பம் அருள்மிகு ஈஸ்வரன் கோயில், குன்னத்தூரிலே அருள்மிகு பெருமாள் கோயில் இவை இரண்டும் மிகவும் பழமையானவை. இந்தக் கோயில்களைப் பராமரித்துத் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். மனித நேயம், சமத்துவம், சமாதானம், கலாச்சாரம் இவையெல்லாம் காக்கப்பட வேண்டுமென்று சொன்னால், கோயில்கள் அவசியம் இருக்க வேண்டும். எனவே, அரசு பரிவுடன் கவனிக்குமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, திருப்பணிகள் நடைபெறாத கோயில்கள் அனைத்திற்கும் திருப்பணிகள் செய்து, குடமுழுக்கு நடத்த வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். குறிப்பாக, கடந்த 2¾ ஆண்டுக் கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், ஏறத்தாழ 3 ஆயிரத்து, 78 திருக்கோயில்களுக்கு இதுவரை திருப்பணிகள் முடிந்து, குடமுழுக்கு நடத்தப்பட்டிருக்கிறது என்பது, இந்த அரசு எத்தகைய வேகத்தில் இத்துறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டு. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தக் கோயில்களுக்கும் தேவைக்கேற்ப, நிதி வசதிக்கேற்ப, மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்களுடைய ஒத்துழைப்பிற்கேற்ப முன்னுரிமை கொடுத்து, வெகுவிரைவிலே திருப்பணிகள் மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூரிலே அமைந்துள்ள அருள்மிகு ஈஸ்வரன் கோயில் மன்னர் காலத்திலே கட்டப்பட்ட கோயிலாகும். கடந்த ஆட்சியிலே அமைச்சர்

2009 பிப்ரவரி 23]

அவர்கள் நேரடியாகச் சென்று, அது மிகவும் பழுதடைந்திருப்பதால், கட்டப்பட வேண்டுமென்று 25 இலட்சம் ரூபாயை ஒதுக்கினார்கள். ஆனால், அந்தப் பணி நடைபெறவில்லை. இப்போது, இடிந்து விழுந்தால் உயிரிழப்பு ஏற்படும் அபாய நிலையில் அது உள்ளது. இதுகுறித்து அமைச்சர் அவர்களிடமும் கடிதம் கொடுத்திருக்கிறேன். எனவே, அதற்கு நிதியினை ஒதுக்கி, அந்தக் கட்டடத்தைக் கட்டிக்கொடுத்து, திருப்பணி செய்வார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதுகுறித்து ஏற்கெனவே என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

48—

வரலாற்றுச் சின்னம்

***29787—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கமுதிக் கோட்டையை வரலாற்றுச் சின்னமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் *(ஆ)* இராமநாதபுரம் மாவட்டம், கமுதி கட்டபொம்மன் கோட்டை பாதுகாக்கப்பட்ட சின்னமாக அரசால் அறிவிக்கப்பட்டு,

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS